**<u>சமூக பாதுகாப்பு தொடர்பான ஆய்வு சுற்றுப்பயணத்துக்காக இந்தோனேசியாவுக்கு சென்ற இலங்கையின் உயர்மட்டக் குழுவினர்.</u>**

**ஜப்பான் தூதரகத்தின் நிதியுதவியின் கீழ் இலங்கையிலுள்ள சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.**

தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சின் செயலளர் திரு. ஆர்.பீ.ஏ. விமலவீரவின் வழிகாட்டலின் கீழ் முற்தரப்பு உயர்மட்டக் குழுவொன்று கடந்த செப்டம்பர் 4 முதல் 7 வரையான காலப்பகுதியில் இந்தோனேசியா நோக்கி ஆய்வுப் பயணமொன்றை மேற்கொண்டனர். மேலும் இக்குழுவானது அந்நாட்டில் காணப்படும் வேலையின்மை காப்பீட்டுத் திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான நடைமுறையில் காணப்படும் விடயங்களை தெரிந்து கொள்வதை நோக்காகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதிலிருந்து கற்றுக் கொண்ட வியங்கள் நம் நாட்டில் ஏற்படுத்தப்படவிருக்கும் வேலையின்மை காப்புறுதித் திட்ட முன்முயற்சிக்கு மிகவும் வலு சேர்க்கும் ஒரு விடயமாக அமையப் பெறும் என்பதோடு இத்திட்டமானது நாட்டுக்குள் மிகவும் நெகிழ்ச்சியானதும் நியாயமானதுமான தொழிலாளர் சந்தையொன்றினை அமைப்பதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கும்

இந்தோனேநியாவிலுள்ள பீ.பீ.ஜே.எஸ் கெட்டனககரஜன் (BPJS Ketenagakerjaan) எனும் நிறுவனமானது இந்த ஆய்வுச் சுற்றுப் பயணத்துக்கான முழு ஏற்பாட்டையும் அந்நாட்டில் ஏற்பாடு செய்திருந்தமை இங்கு விசேட அமைசமாகும். மேலும் இந்நிறுவனமானது அந்நாட்டில் விசாலமான சமூகப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் என்பதோடு தொழிலாளர் தொடர்பாகன பரந்துபட்ட விடயங்கள் குறிப்பாக தொழிலின்மை காப்புறுதி, தொழில் புரிதலின் போது ஏற்படும் பாதிப்புக்கயுக்கான இழப்பீடு மற்றும் வயது முதிர்ச்சியின் போதான காப்பீட்டுத் திட்டம் போன்ற விடயங்களில் செயற்படும் முன்னணியில் திகழும் ஒரு நிறுவனமாகும்.

இந்த முற்தரப்பு ஆய்வுக் குழுவில் தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சு, தொழில் திணைக்களம்> முதலாளிமார் சம்மேளனம்> தொழிற்சங்கங்களான இலங்கை சுதந்திர பணியாளர் சங்கம் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரிதிநிதிகளும் பங்குபற்றினர்.

உலகிலுள்ள தொழிலாளர்களில் 18.6 வீதமான தொழிலிழந்த தொழிலாளர்கள் மாத்திரமே தொழிலின்மைக்கான காப்புறுதியில் உள்வாங்கப்பட்டுள்ளனர், இது சமூகப் பாதுகாப்பின் மிக சிறிதளவான கிளையாகவே கணிக்கப்படுகிறது (உலக சமூக பாதுகாப்பு அறிக்கை 2020). சமூக பாதுகாப்பில் முழுமையான தொழிலின்மைக்கான காப்புறுதி மிகவும் இன்றியமையாததாகும். இந்த ஆய்வு சுற்றுப்பயணமானது ஜப்பான் அரசின் நன்கொடையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் “ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்குதல்” நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ‘இலங்கையில் தொழிலின்மைக்கான காப்புறுதி முறைமையை அபிவிருத்தி செய்தல்” எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

*சர்வதேச தொழிலாளனர் ஸ்தாபமானது வேலையுலகிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேடத்துவம் வாய்ந்த நிறுவனமாகும். மேலும்> இது சர்வதேச தொழில் நியமங்கள், தொழிலாளர் உரிமைகள் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான அழுத்தமான விடயங்களையும் அது தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள தொழிநுட்ப உதிவிகளை வழங்குகிறது. சரவதேச தொழிலாளர் ஸ்தாபனமானது சமூக நீதி> மற்றும் உலகளாவிய கண்ணியமான வேலைளை மேம்படுத்துவதற்காக அரசாங்கங்கள்> தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றுகிறது.*